Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 14/2025**

Preliminary Register

Deposition of **PW- 7 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவி | Father Name | : | கலியன் |
| Village | : | ராஜேந்திரநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | EB- தற்காலிக ஊழியர் |
| Religion | : | | Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து EB ல் தற்காலிக ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1, ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். எனக்கு தேதி நியாபகமில்லை, ஒரு நாள் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ன் வீட்டின் எதிர்புறம் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நான் ஆஜர் எதிரிகளையும், அ.சா.1 ஐயும் மத்தியஸ்தம் செய்து அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

அ.சா.1ன் கணவர் தெட்சிணாமூர்த்தியை ஆஜர் 2வது எதிரி வாசு மற்றும் ரமணி ஆகியோர் கொலை செய்து அது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால் அ.சா.1 தனது கணவரின் கொலைவழக்கு சம்மந்தமாக நீதிமன்றம் சென்று வருவார். அவ்வாறு அ.சா.1 நீதிமன்றம் சென்று வருவது குறித்து ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1 யிடம் எங்களுக்கு எதிராக சாட்சிகள் சொன்னால் உன் கணவரை கொன்றது போல் உன்னையும் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் அந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையில் சண்டை நடந்தது. ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும் ஆஜர் 1 வது எதிரி கையிலிருந்த கத்தியை காட்டி அ.சா.1க்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொன்னால் அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையில் சண்டை நடந்தது நான் விலக்கிவிட்டேன். ஆஜர் எதிரிகள் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி ஆஜர் 1 வது எதிரி அ.சா.1க்கு கொலைமிரட்டல் விடுத்ததை நான் நேரில் பார்த்தேன் என்று சொன்னால் சண்டை நடந்தது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் சம்பவம் நடந்ததாக கூறுவது எத்தனை மாதங்களுக்கு முன்னால் என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை. அ.சா.1 எனது அண்ணனின் மனைவி என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.10 19:37:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.